புரட்சிப்
# பெரியார் முழக்கம்

www.dvkperiyar.com

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு | ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | PURATCHI PERIYAR MUZHAKAM

• திருவள்ளுவர் ஆண்டு 2057 • மார்ச் (March), 19, 2026 • புரட்சி 26 • முழக்கம்(ISSUE) 12 • விலை(PRICE) ரூ.6.00

# திராவிட மாடல் ஆட்சியின் தனித்துவம்!

*திராவிட மாடல் ஆட்சி இந்திய அரசியலுக்கு ஒரு புதிய திசையை வழிகாட்டி இருக்கிறது.*

★ 1990க்கு பிறகு "உலகமயமாக்கல்" கொள்கை அறிமுகமான பிறகு தனியார் துறைகளும், கார்ப்பரேட் நிறுவனங்களும் தலை தூக்கின; அரசு பொதுத்துறை நிறுவனங்கள் மறையத் தொடங்கி விட்டன.

★ விளிம்பு நிலை மக்களின் வாழ்வியல் கடும் நெருக்கடிகளுக்கு உள்ளாகியது. இதிலிருந்து மக்களைக் காப்பாற்ற மக்களுக்கு நேரடியாக பயனளிக்க கூடிய மக்கள் நலத்திட்டங்கள் மாற்று வழி என்ற நிலையை உருவாக்கி விட்டது.

★ 1990க்கு முன்பு சோவியத் ஒன்றியம் சிதையாத நிலையில் சோசியலிசக் கொள்கைகள் செல்வாக்கு பெற்றிருந்தன. திராவிட அரசியல் சோசியலிசத்தின் பக்கம் உறுதியாக நின்றது. அதன் காரணமாகவே கலைஞர் பேருந்துகளை அரசுடைமையாக்கினார்.


★ நில உச்சவரம்பு சட்டத்தைக் கொண்டு வந்தார் .

★ தஞ்சை மாவட்டத்தில் நிலப்பிரபுக்களின் ஆதிக்கம் வீழ்த்தப்பட்டது.

★ தொடர்ந்து தனியார் துறை வேகமாக தலையெடுத்தபோது விழித்துக்கொண்ட கலைஞர் இந்தியாவில் முதன்முதலாக தொழில்நுட்பக் கொள்கையை உருவாக்கினார். அடையாறு டைடல் பார்க் வந்தது.

★ மாறிவரும் சர்வதேச பொருளாதாரக் கொள்கைகளின் தாக்கத்திலிருந்து மக்களை விடுவிக்க வேண்டும். அதே நேரத்தில் இந்தப் பொருளாதாரக் கொள்கைகள் வழியாக தமிழ்நாட்டில் தொழில் வளர்ச்சியையும் உருவாக்க வேண்டும் என்ற கண்ணோட்டத்தில் திராவிட மாடல் ஆட்சி களம் இறங்கியது.

★ பதவி வருவதற்கு முன்பே 6 தொலைநோக்கு திட்டங்களை பொருளாதார நிபுணர்களின் ஆலோசனையோடு முதல்வர் ஸ்டாலின் உருவாக்கினார். ஆட்சிக்கு வந்த உடனேயே அந்த தொலைநோக்கு திட்டங்கள் படிப்படியாக செயல்வடிவம் பெற்றன. இதுவே திராவிட மாடல்!



★ பெரியார் 1925-லேயே முன்வைத்த பெண்களுக்கான சுயமரியாதை, அவர்களை அதிகாரப்படுத்துதல் என்ற திட்டங்களை கலைஞர் தனது ஆட்சியிலே தொடங்கிவிட்டார். முதல்வர் ஸ்டாலின் அதை விரிவாக்கினார்.

★ பெண்களிடையே பணப்புழக்கத்தையும் (உரிமைத் தொகை), சுதந்திர நடமாட்ட உரிமையையும் (விடியல் பயணம்), உயர்கல்வியை நோக்கி அழைத்துச் செல்லும் (புதுமைப் பெண்) திட்டமும் வடிவமைக்கப்பட்டன. இதனால் பெண்களுக்கு தன்னம்பிக்கையையும் சுயசார்பையும் இத்திட்டங்கள் உருவாக்கின. இத்திட்டத்தின் தாக்கங்கள் திட்டக்குழு வழியாக தொடர்ந்து ஆய்வுகளுக்கு உள்ளாக்கப்பட்டன.

★ தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் தொடர்ந்து. " எந்த ஒரு பிரிவினரையும் பின்தங்க விடமாட்டோம்" என்று கூறும் அந்தக் கருத்துதான் திராவிட மாடல் ஆட்சியின் தனித்துவம்!

★ "எல்லோருக்கும் எல்லாம்" என்ற சொற்றொடர் தவிர்க்கப்பட்டது. அதற்கு மாற்றாக அதைவிட துல்லியமாக ஒவ்வொரு பிரிவினரும் அடையாளம் காணப்பட்டு அவர்களுக்கான திட்டங்கள் செயல்படுத்தப்பட்டன.

★ பெண்கள்- மாணவர்கள்-மாணவிகள் -பள்ளிக் குழந்தைகள் - திருநங்கைகள் - மாற்றுத்திறனாளிகள் - வயது முதிர்ந்தோர் - விளையாட்டு வீரர்கள் - கைவினைக் கலைஞர்கள் - கைவிடப்பட்டவர்கள் என்று ஒவ்வொரு பிரிவினருக்கும் தனித்தனியான திட்டங்கள் வந்தன.

★ பெண்களின் கல்விக்கு முன்னுரிமை தரப்பட்டது. பார்ப்பனிய மனுவாதம் சூத்திர பஞ்சமர்களுக்கு மறுத்த கல்வியை மீட்டுத் தந்தது திராவிட இயக்கம். பெரியார் வாழ்நாள் முழுவதும் இந்தக் கல்வி உரிமைகளுக்காகவே போராடினார்.

★ பார்ப்பனர் அல்லாத மக்களின் சுயமரியாதையும் வாழ்வுரிமையும் பொருளாதாரத்தை விட சக்திவாய்ந்த கல்வி வளர்ச்சியில் மட்டுமே அடங்கி இருக்கிறது என்ற சமூக எதார்த்தத்தை துல்லியமாகக் கண்டறிந்த தலைவர் பெரியார்.

★ தமிழ்நாட்டின் கல்விக் கட்டமைப்பு வேறு எந்த மாநிலத்திலும் கிடையாது. கொரோனா காலத்தில் கடும் பாதிப்புக்குள்ளான கல்வித்துறையை மீட்டெடுக்கும் திட்டங்களை உருவாக்கியது திராவிட மாடல் ஆட்சி.

★ "இல்லம் தேடி கல்வி" திட்டம் தொடங்கப்பட்டது. பள்ளிக்கல்வியை பாதியிலேயே நிறுத்திவிட்டு உடல் உழைப்பு வேலைக்கு சென்ற மாணவர்களை தேடிப்பிடித்து கல்வி கட்டமைப்புக்குள் கொண்டு வந்ததும் திராவிட மாடல் ஆட்சிதான்.

★ மக்களுக்கான பிரச்சனைகளைத் தீர்ப்பதில் அரசு நிர்வாகம் ஆமை வேகத்தில் தான் நகர்கிறது என்பது மறுக்க முடியாத உண்மை. இதற்கான நடைமுறைகள்; துறை சார்ந்தவர்களிடம் பெற வேண்டிய ஒப்புதல்கள்; இதனால் கோப்புகளை கிடப்பில் போடும் அலட்சியம் என்பதாகவே நிர்வாக அமைப்புகள் இயங்குகின்றன. இந்த நெருக்கடியில் இருந்து மக்களை விடுவிக்கும் செயல்திட்டங்களை அறிமுகப்படுத்தியது திராவிட மாடல் ஆட்சி. துறை சார்ந்த அதிகாரிகள் மக்களிடம் வந்தார்கள். மக்களின் பிரச்சனைகள் அதே இடத்திலேயே தீர்த்து வைக்கப்பட்டன.

★ கியூபா, சீனா நாடுகளைப் போல் மருத்துவர்கள் மக்களை நோக்கிச் செல்லும் ‘இல்லம் தேடி மருத்துவம்’; முதியோருக்கு வீடு தேடி ரேஷன் பொருள்களை வழங்கும்; தாயுமானவர் திட்டம் போன்ற திட்டங்கள் வழியாக அரசு நிர்வாகப் பிடியிலிருந்து மக்கள் விடுவிக்கப்பட்டனர்.

★ மக்களுக்கு வழங்கப்படும் நிதி அவர்கள் அலைபேசியில் வங்கி கணக்கிற்கு அனுப்பப்படுகிறது.

★ ஜெயலலிதா காலத்தில் நடந்ததைப் போல் எதிர்க்கட்சிகளை பழிவாங்கும் அரசியலுக்கு முற்றுப்புள்ளி வைத்தது. அடுக்கடுக்கான சாதனைத் திட்டங்கள் வழியாக மக்கள் அரசியலை முன்னெடுத்தார் முதல்வர் மு.க.ஸ்டாலின்.

★ உரிமைகளுக்காக ஒன்றிய ஆட்சியை எதிர்த்து குரல் கொடுத்தார் முதல்வர். ஆனால் எதிர்ப்பு அரசியலோடு நிற்கவில்லை. மக்களுக்கான திட்டங்கள் தொடர்ந்துகொண்டே இருந்தன. சாதனைகள் வழியாக மக்கள் வளர்ச்சியையும் வலிமையையும் உறுதியாக்கிக் கொண்டே வருகிறது.

★ இத்தகைய வலிமையான மக்கள் சக்தியின் பின்புலத்தில்தான் ஒன்றிய ஆட்சிக்கு எதிரான உரிமைக் குரலை எழுப்புகிறார் முதல்வர்.

★ நிதியை முடக்கி மிரட்டினார்கள் ஆட்சி பணியவில்லை; தேசிய கல்விக் கொள்கைக்கு மாற்றாக மாநில கல்விக் கொள்கை உருவாக்கப்பட்டது; குலத்தொழிலுக்கு அழைத்துச் சொல்லும் மோடியின் "விஸ்வகர்மா" திட்டத்தை மறுத்து ஜாதிகளைக் கடந்து கலைஞர் கைவினை திட்டத்தை முதல்வர் முன்வைத்தார்.

★ ஆளுநர் பறித்த உரிமைகளை சட்டப் போராட்டம் நடத்தி அனைத்து மாநில ஆட்சிகளையும் ஆளுநர் அதிகார மீறல்களில் இருந்து விடுவித்தது; மருத்துவ உயர் பட்டப்படிப்பில் இட ஒதுக்கீட்டை மறுத்த ஒன்றிய ஆட்சியின் சமூக அநீதிக்கு எதிராக சட்டப் போராட்டம் நடத்தி அனைத்து மாநில பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கும் இட ஒதுக்கீட்டு உரிமையை மீட்டுத்தந்தது திராவிட மாடல் ஆட்சி.

★ கட்சி மாறுபாடுகளைக் கடந்து தமிழ்நாட்டு அரசியலில் கட்சி மாறுபாடுகளை கடந்து மனித மாண்புடன் செயல்பட்ட முதல்வராக மு.க. ஸ்டாலின் நிமிர்ந்து நிற்கிறார்.

★ கரூரில் தவெக தலைவர் விஜய் நடத்திய கூட்டத்தில் அக்கட்சியின் தவறான அணுகுமுறையால் 41 உயிர்கள் கூட்ட நெரிசலில் சிக்கி பரிதாபமாக உயிரிழந்த போது நள்ளிரவில் பாதிக்கப்பட்டவர்களிடம் நலம் விசாரித்து அரசு உதவித்தொகையை அறிவித்தார். இதை விஜய் கட்சியின் எதிர்ப்பு அரசியலுக்கு பயன்படுத்தாமல் எந்த ஒரு தலைவரும் தனது தொண்டர்கள் இறப்பதை விரும்ப மாட்டார்கள் என்று கூறி தமிழ்நாட்டு மக்களின் தலைவராக உயர்ந்தார்.

★ கொள்கை எதிரிகளும் உடல்நலம் பாதிக்கப்பட்டால் தேடிச்சென்று நலம் விசாரிக்கிறார். தமிழ்நாட்டு அரசியலில் இந்த உயரிய மனித மாண்பை வெளிப்படுத்தியது திராவிட மாடல் ஆட்சி!

★ இப்படி எத்தனையோ திட்டங்கள் செயல்பாடுகள் வழியாக திராவிட மாடல் ஆட்சி ஏனைய மாடல்களை விட தனித்துவமாக நிமிர்ந்து நிற்கிறது.

(நிமிர்வோம் வாசகர் வட்டத்தில் கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் உரையிலிருந்து....)

தலையங்கம்

# மோடி ஆட்சியின் சமூகநீதி துரோகம்!

சமூக மற்றும் கல்வி அடிப்படையில் தான் பிற்படுத்தப்பட்ட மக்கள் பின்தாங்கினார்களே தவிர பொருளாதார காரணங்களால் அல்ல என்று அரசியல் சட்டம் தெளிவாகக் கூறியது. பின்தங்கியதற்கான காரணம் அவர்கள் ஒடுக்கப்பட்ட ஜாதியில் பிறந்ததுதான்; பொருளாதார வசதிகள் இருந்தாலும் கூட பிற்படுத்தப்பட்ட ஜாதியினர் பொருளாதார வசதிகளே இல்லாத பார்ப்பனர்களிடமும் உயர் ஜாதியினரிடமும் கீழ்ப்படியும் நிலையே நீடித்தது. மனுதர்மத்தைக் காப்பாற்றத் துடிக்கும் பார்ப்பனர்கள் தங்கள் ஆதிக்கம் பறிபோய்விடும் என்பதால் இந்த இட ஒதுக்கீடுகளைப் பொருளாதார அடிப்படையில் மாற்ற வேண்டும் என்று தொடர்ந்து வலியுறுத்தி வந்தனர்.

1992-ல் இந்திரா-சகானி வழக்கில் உச்சநீதிமன்றம் "கிரிமிலேயர்" என்ற பொருளாதார வரம்பை புகுத்தியது. இந்தக் "கிரிமிலேயர்" குடும்பத்தில் பொருளாதார வருமானத்தை அடிப்படையாகக் கொண்டு பிற்படுத்தப்பட்டோரை நிர்ணயம் செய்தது. இதனால் பிற்படுத்தப்பட்ட சமூகத்தினர் கடுமையான பாதிப்புக்கு உள்ளானார்கள். இப்போது உச்ச நீதிமன்றம் இந்த "கிரிமிலேயர்" வடிகட்டுதலுக்கு முற்றுப்புள்ளி வைத்துள்ளது. வழக்கு இதுதான்: பிற்படுத்தப்பட்ட சமூதாயத்தைச் சார்ந்த 60 மாணவர்கள் அய்.ஏ.எஸ், அய்.பி.எஸ், அய்.எப்.எஸ் மற்றும் அய்.ஆர்.எஸ் தேர்வுகளில் தேர்ச்சி பெற்றும் அவர்கள் பதவி ஏற்க முடியவில்லை. காரணம் இவர்கள் பெற்றோர் வருமானத்தைக் கணக்கில் எடுத்து "கிரிமிலேயர்" பட்டியலுக்குள் கொண்டு வந்து நிராகரிக்கப்பட்டனர்.

இதனை எதிர்த்து உச்சநீதிமன்றத்தில் பாதிக்கப்பட்டவர்கள் வழக்கு தொடர்ந்தனர். இந்த வழக்கு 10 ஆண்டுகளாக நடந்தது. உச்ச நீதிமன்றத்தில் நீதிபதிகள் நரசிம்மா மற்றும் ஆர்.மகாதேவன் அமர்வு முன் கடந்த மார்ச் 12-ல் விசாரணைக்கு வந்தது. நீதிபதிகள் பெற்றோர்கள் வருமானத்தை "கிரிமிலேயர்" அளவுகோலில் கொண்டு வரக்கூடாது என்று தீர்ப்பளித்துள்ளனர். ஏ மற்றும் பி நிலையில் பொதுத்துறை மற்றும் தனியார் துறையில் பெற்றோர்கள் பணியாற்றினால் இட ஒதுக்கீடு உரிமை அவர்களின் மகன் மற்றும் மகள்களுக்கு முற்றாக மறுக்கப்படுகிறது. அதே நேரத்தில் சி மற்றும் டி பிரிவுகளில் வேலை செய்யும் பெற்றோர்களின் பிள்ளைகளுக்கு இட ஒதுக்கீடு உரிமைகள் கிடைக்கின்றன என்று நீதிபதிகள் சுட்டிக் காட்டியுள்ளனர். இப்படி இருவேறு பிரிவினர்களுக்கு இடையே பாகுபாடு ஏன் என்ற கேள்வியை உச்சநீதிமன்றம் எழுப்பியது.

1993-ஆம் ஆண்டு ஒன்றிய அரசு வெளியிட்ட ஆணையில் "கிரிமிலேயர்" எனும் பொருளாதார வரம்பில் பெற்றோர்களின் வருமானம் மற்றும் விவசாய வருமானத்தை சேர்க்கக் கூடாது என்று தெளிவாக வரையறுக்கப்பட்டது. இந்த வருமானத்தை சேர்த்தால் ஆண்டுக்கு ரூ.8,00,00 என்ற வருமான வரம்பைத் தாண்டி விடுகிறது. இந்த நிலையில் பெற்றோர்கள் ஊதியத்தை சேர்க்க கூடாது என்ற அரசு ஆணையை சுட்டிக்காட்டித் தான் இந்த வழக்கு தொடரப்பட்டது. தேர்ச்சி பெற்ற 2பேர் 2014-ம் ஆண்டு அரசு தீர்ப்பாயத்தில் (CAT) நீதி கேட்டு முறையிட்டனர். தீர்ப்பாயம் கோரிக்கையை ஏற்று பணிநியமனம் வழங்க உத்தரவிட்டது. ஆனால் ஒன்றிய பாஜக ஆட்சி இதை ஏற்க மறுத்து மேல்முறையீடு செய்தது. தொடர்ந்து 2017-ல் சென்னை உயர்நீதிமன்றமும், 2018-ல் டெல்லி உயர்நீதிமன்றமும், ஒன்றிய அரசின் மேல்முறையீடுகளைத் தள்ளுபடி செய்தன. ஒன்றிய அரசின் மேல்முறையீட்டை நீதிமன்றங்கள் கண்டித்தன. “வெறுப்பை உருவாக்கும் பாகுபாடு” (Hostile Descrimination) என்ற சொல்லை நீதிமன்றம் பயன்படுத்தியது. அதற்குப் பிறகும் ஒன்றிய பாஜக ஆட்சி விடவில்லை. 2018-ல் உச்ச நீதிமன்றத்தை அணுகி உயர் நீதிமன்றங்களின் தீர்ப்புகளுக்கு தடை கோரியது.

2020-ஆம் ஆண்டு மோடியின் சமூக நீதி அமைச்சகம் வருமான வரம்பில் பெற்றோர்களின் ஊதியத்தையும் சேர்க்க வேண்டும் என்று முடிவெடுத்தது. இந்த முடிவை பாஜகவின் பிற்படுத்தப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களும் தேசிய பிற்படுத்தப்பட்டோர் ஆணையமும் ஏற்கவில்லை. தங்கள் எதிர்ப்புகளைத் தெரிவித்தார்கள். ஆனாலும் அமைச்சரவை இந்த எதிர்ப்புகளைப் புறந்தள்ளியது. 12 ஆண்டுகால போராட்டத்திற்கு பிறகு 60 பிற்படுத்தப்பட்ட மாணவர்களின் வாழ்வில் ஒளி ஏற்றி இருக்கிறது உச்ச நீதிமன்றம்.

இதில் மற்றொரு திடுக்கிடும் செய்தியும் உண்டு. பெற்றோரின் ஊதியம் மற்றும் விவசாய வருமானத்தை பொருளாதார வரம்பில் இணைக்கக் கூடாது என்று காங்கிரஸ் ஆட்சியில் பிறப்பித்த ஆணைக்கு முற்றிலும் முரணாக அவற்றையும் சேர்க்க வேண்டும் என்று ஒரு கடிதம் 2004-ல் வாஜ்பாய் பிரதமராக இருந்தபோது வெளிவந்தது. இப்படி ஒரு கடிதம் எங்கிருந்து வந்தது? எந்த துறையில் வெளியிடப்பட்டது? என்பது கண்டறிய முடியாத மர்மமாகவே இருக்கிறது. இதை நீதிபதிகள் தங்கள் தீர்ப்பில் சுட்டிக்காட்டி உள்ளனர்.

பிற்படுத்தப்பட்டோருக்கான நாடாளுமன்றக் குழு தனது அறிக்கையில் இந்தக் கடிதத்தின் மூலம் மர்மமாக இருக்கிறது என்பதை பதிவு செய்துள்ளதை நீதிபதிகள் எடுத்துக்காட்டியுள்ளனர். அரசியல் சட்டத்தின் 162-வது பிரிவின் கீழ் 1993-ல் வெளியிடப்பட்ட ஒரு அரசாணையை முற்றாக மறுத்து அரசு சார்பில் வெளியிட்ட ஒரு ‘அநாமதேயம் கடிதம்’ புறந்தள்ளி இருப்பதை நீதிபதிகள் கடுமையாக கண்டித்துள்ளனர். 1951-இல் இட ஒதுக்கீட்டுக்கு எதிராக உச்சநீதிமன்றத்தில் வழக்கு வந்தது. அப்போது இட ஒதுக்கீட்டினால் தனக்கு மருத்துவக் கல்லூரி அனுமதி கிடைக்கவில்லை என்று செண்பகம் துரைராஜ் என்ற ஒரு பார்ப்பன பெண் வழக்கு தொடர்ந்திருந்தார். உச்சநீதிமன்ற விசாரணையில் அந்தப் பெண் மருத்துவக் கல்லூரிக்கு மனுவே போடவில்லை என்ற அதிர்ச்சியான உண்மை வெளிச்சத்திற்கு வந்தது.

அரசு நிர்வாகத்தில் உயர் பதவிகளை ஆக்கிரமித்து இருக்கும் பார்ப்பனர்கள் தங்கள் அதிகாரங்களை எவ்வளவு முறைகேடாக பயன்படுத்துகிறார்கள் என்பதற்கு இவை சான்றுகள். ஒரே ஒரு ‘அனாமதேய’ கடிதத்தின் வழியாக பல நூற்றுக்கணக்கான பிற்படுத்தப்பட்டவருடைய உரிமையை 10 ஆண்டு காலத்திற்கு மேலாக பறித்து வைத்திருந்த சமூக அநீதி ஒன்றிய மோடி ஆட்சியில் நடந்து முடிந்திருக்கிறது.

# கருநாடகத்தில் ஆணவப் படுகொலை தடுப்புச் சட்டம்

*கர்நாடக மாநில அரசு ஆணவப் படுகொலை தடுப்புச்சட்டம் ஒன்றை கொண்டுவர முடிவு செய்து இருக்கிறது; மிகவும் பாராட்டி வரவேற்கத்தக்க முடிவாகும். இந்த சட்டத்திற்கு “இவர் நம்மவர்” என்ற மிக அழகான பெயர் சூட்டப்பட்டு இருக்கிறது. ஒரு ஆண் பெண்ணிடம் திருமணம் செய்வதாக உறுதியளித்து உடலுறவு கொண்டு பிறகு ஜாதியைக் காரணம் காட்டி திருமணம் செய்ய மறுத்தால் அது பாலியல் வன்கொடுமை என்று இந்தச் சட்டம் கூறுகிறது.*

*குடும்ப அழுத்தம் அல்லது ஜாதி சார்ந்த காரணங்களைக் காட்டி திருமணம் செய்ய மறுக்கும் நபருக்கு 5 ஆண்டுகளுக்குக் குறையாத சிறைத் தண்டனையோ ஆயுள் தண்டனையோ வழங்குவதற்கு இந்த சட்டம் வழி வகுக்கிறது. தமிழ்நாடு அரசும் இதேபோன்று சட்டம் கொண்டுவர வேண்டும் என்று வலியுறுத்துகிறோம்! சமூகத்தில் ஜாதி ஒரு புற்றுநோயாக பரவி நிற்கிறது. இதை அழிப்பதற்கு சட்டங்களும் தேவை; அத்துடன் சமூகத்தில் ஜாதி எதிர்ப்புக்கான இயக்கங்கள் நடத்துவது இதைவிட முக்கியமானது! எந்த ஒரு அரசியல் கட்சியும் ஜாதி எதிர்ப்பை தனது கட்சியின் அரசியல் செயல்பாடாக ஏற்கவில்லை.*

*ஆனால் ஜாதி ஆணவப் படுகொலை நடக்கும்போது மட்டும் ஆளும் கட்சியின் மீது குற்றம் சாட்டுவது நேர்மையற்ற அரசியல். இந்த ஜாதிவெறி கொலைகளுக்கான பொறுப்பு அனைத்து கட்சிகளுக்கும் உண்டு சமூகத்துக்கும் உண்டு. குஜராத்தில் நடக்கும் பாஜக ஆட்சி கடந்த வாரம் ஒரு சட்ட த்திருத்தம் கொண்டு வந்துள்ளது. அதாவது பெற்றோர்கள் ஒப்புதல் இருந்தால் தான் திருமணங்களைப் பதிவு செய்ய வேண்டும் என்கிறது அந்த சட்டம். இதன் வழியாக ஜாதி மறுப்பு திருமணங்கள் தடை செய்யப்படுகின்றன. பெற்றோர் ஒப்புதல் இல்லாமல் அவர்களை எதிர்த்துத்தான் ஜாதி மறுப்பு திருமணங்களே நடக்கின்றன. ஆக ஜாதியைப் பாதுகாக்க பாஜக ஆட்சி துடிக்கிறது.*

*மகாராஷ்டிரா சட்டமன்றத்தில் மதமாற்ற தடை மசோதா ஒன்று நேற்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இதன்படி மதமாற்றம் செய்து கொண்டால் 10 ஆண்டு சிறை 7 லட்சம் ரூபாய் அபராதம். இதைவிட கொடுமை இந்தச் சட்டத்தில் இடம் பெற்றுள்ள ஒரு பிரிவு; பெண்கள் அல்லது மனநலம் பாதிக்கப்பட்டோர் அல்லது பட்டியலின ஜாதி மற்றும் பட்டியல் பழங்குடியினர் மதம் மாறினால் 7-ஆண்டு சிறை ; 5 லட்சம் அபராதம் என்று கூறுகிறது அந்தப் பிரிவு.*

*விளிம்பு நிலை மக்களின் சுயமரியாதையைப் பறித்து அவர்களை இழிவுபடுத்துகிறார்கள். மதமாற்ற தடைச் சட்டத்தில் குறிப்பாக பட்டியல் பிரிவினரை இணைக்கிறது இந்த சட்டம் . இப்படி ஒரு சட்டம் இதுவரை எந்த மாநிலத்திலும் இல்லை. தமிழ்நாட்டிலும் பத்திரப்பதிவு அலுவலகங்களில் அதிகாரிகள் திருமணப் பதிவுக்கு பெற்றோர்கள் ஒப்புதலை கட்டாயப்படுத்துகிறார்கள் என்று இரு நாட்களுக்கு முன்பு "டைம்ஸ் ஆப் இந்தியா" நாளேடு செய்தி வெளியிட்டு இருக்கிறது.*

*தமிழ்நாட்டில் அப்படி எதுவும் சட்டம் இல்லை ஆனால் அதிகாரிகளின் ஜாதி மனநிலையால் இப்படி செயல்படுகிறார்கள். தமிழ்நாடு அரசு இந்த அதிகாரிகள் மீது கண்டிப்பான நடவடிக்கை எடுக்க வேண்டும். அனைத்துத் துறைகளிலும் அதிகாரிகளிடையே நிலவும் ஜாதி உணர்வு செயல்களை கண்காணிக்க குழுக்களை அமைப்பது குறித்து அரசு பரிசீலிக்க வேண்டியது மட்டுமல்ல; ஜாதி உணர்வோடு செயல்படும் அமைச்சர்களும் கண்காணிக்கப்பட வேண்டும். ஆக ஜாதியைப் பாதுகாக்க பாஜக ஆட்சி துடிக்கிறது.*

**விடுதலை இரோசேந்திரன்**
**முகநூல் பதிவு**

# ஆர்.எஸ்.எஸ்.ஸை தடை செய்ய பரிந்துரை!

*அமெரிக்க மத சுதந்திர ஆணையம் ஆர்.எஸ்.எஸ் (RSS) மற்றும் RAW அமைப்புகளுக்கு எதிராகத் தடைகள் விதிக்கப் பரிந்துரைத்துள்ளது. இந்தியாவில் மத சுதந்திரம் காக்கப்படுவதில்லை என்றும், சகிப்புத்தன்மை சரிந்துவிட்டது என்றும் அதற்கு ஆர்எஸ்எஸ்-தான் காரணம் என்றும் கூறியுள்ள இந்த அமைப்பு ராஷ்டிரிய ஸ்வயம்சேவக் சங்கத்திற்கு (RSS) எதிராக தடைகளை விதிக்க வேண்டுமென்று அமெரிக்க அதிபர் டொனால்டு டிரம்பிற்கு பரிந்துரைத்துள்ளது. ஆர்.எஸ்.எஸ். அமைப்பின் சொத்துக்களை முடக்குவது மற்றும் அமெரிக்காவிற்குள் நுழைவதற்குத் தடை விதிப்பது போன்றவை இந்த தடையில் அடங்கும். இந்த ஆணையம், மத சுதந்திரத்திற்கான உலகளாவிய உரிமையைக் கண்காணித்து வெள்ளை மாளிகைக்குக் கொள்கை ஆலோசனைகளை வழங்கும் ஒரு சுதந்திரமான அமெரிக்க அரசு நிறுவனமாகும்.*

*கடந்த நவம்பரில் வெளியிடப்பட்ட இந்தியா தொடர்பான இதழ் ஒன்றில், "ஆர்.எஸ்.எஸ் மற்றும் பா.ஜ.க. இடையேயான ஒன்றோடொன்று இணைக்கப்பட்ட உறவு, குடியுரிமை, மதமாற்றத் தடை மற்றும் பசுவதை தடுப்புச் சட்டங்கள் உள்ளிட்ட பல பாகுபாடான சட்டங்களை உருவாக்கவும் செயல்படுத்தவும் அனுமதிக்கிறது" என்று ஆணையம் குறிப்பிட்டிருந்தது. இதற்காக இந்தியாவை 'குறிப்பிட்ட கவலைக்குரிய நாடு' (Country of Particular Concern) என்று பட்டியலிடவும் அந்த அமைப்பு கோரியுள்ளது.*

*2026-ஆம் ஆண்டு வருடாந்திர அறிக்கையில், மத சுதந்திர மீறல்களைப் பொறுத்துக் கொள்ளும் தனிநபர்கள் மற்றும் அமைப்புகளுக்கு எதிராகத் தடை விதிக்கப்பட வேண்டிய பட்டியலில் இந்தியாவின் ஆராய்ச்சி மற்றும் பகுப்பாய்வுப் பிரிவும் (RAW) இருக்க வேண்டும் என்று ஆணையம் பரிந்துரைத்துள்ளது. இது இந்தியாவின் வெளிநாட்டு உளவு அமைப்பாகும். இத்தகைய பரிந்துரைகளை அமெரிக்கா ஏற்றுக்கொண்டு நடைமுறைப்படுத்த வேண்டுமென்று எந்த கட்டாயமும் இல்லை என்றாலும் கூட, சர்வதேச சமூகத்தில் இந்தியாவை வெட்கித் தலைகுனியச் செய்யும் அறிக்கையாக இது அமைந்துள்ளது.*

*தமிழ்நாடு தவிர்த்துவிட்டு இந்தியா முழுமையும் இத்தகைய வெறுப்புவாத பேச்சுக்கள், கலவரங்கள் நடந்து வருவதை உலகம் அறிந்ததே. இதனால் பல்வேறு மாநிலங்களுக்கு புதிய தொழில் முதலீடுகள் குறைந்து வருகின்றன. வேலைவாய்ப்புகளை உருவாக்க முடியாமல் பா.ஜ.க. ஆளும் மாநில அரசுகள் திணறிக்கொண்டிருக்கின்றன. குறிப்பாக, ஒடிசாவில் பா.ஜ.க. ஆட்சி அமைந்த பிறகு, 2024-ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் இருந்து இதுவரை 54 வகுப்புவாத கலவரங்கள் நடந்துள்ளன. 7 கும்பல் தாக்குதல் சம்பவங்கள் நடந்துள்ளன என்று அம்மாநில முதல்வர் மோகன் சரண் மாஜி சட்டமன்றத்திலேயே ஒப்புக்கொண்டுள்ளார்.*

*இச்சிக்கல்களுக்கு தீர்வு காணாத ஒன்றிய பா.ஜ.க. அரசு, , இந்த ஆணையம் "சார்புடைய மற்றும் அரசியல் உள்நோக்கம் கொண்ட மதிப்பீடுகளை வெளியிடும் முறையைக் கொண்டுள்ளது" என்று குற்றம்சாட்டுவதையே வாடிக்கையாகக் கொண்டுள்ளது. “இந்தியா மீதான பழிபோடுதல்களுக்குப் பதிலாக அமெரிக்காவில் ஹிந்து கோயில்கள் மீதான தாக்குதல்கள் மற்றும் சகிப்புத்தன்மையற்ற சூழல் அதிகரிப்பு போன்ற தீவிர பிரச்னைகளில் அமெரிக்கா கவனம் செலுத்தலாம்” என்றும் ஒன்றிய அரசு அமெரிக்காவுக்கு பதிலடி கொடுத்திருக்கிறது.*

*பாகிஸ்தான் உடனான போரை நான் தான் நிறுத்தினேன் என டிரம்ப் கூறியதற்கு மோடி அரசு இதுவரை வாய் திறக்கவில்லை, ரஷ்யாவிடம் இருந்து கச்சா எண்ணெய் இறக்குமதி செய்தால் 50% வரி விதிப்போம் என்று கூறி கூடுதல் வரிவிதிப்பை டிரம்ப் திணித்தபோதும் மோடி அரசு வாய் திறக்கவில்லை, இந்தியாவுக்கு பயிற்சி மேற்கொண்டு திரும்பிய ஈரான் ராணுவக் கப்பலை அமெரிக்க படைகள் வீழ்த்தியபோதும் மோடி அரசு வாய் திறக்கவில்லை, இஸ்ரேல் - ஈரான் போர் காரணமாக கச்சா எண்ணெய் தட்டுப்பாட்டை தவிர்க்க ரஷ்யாவிடம் இருந்து இறக்குமதி செய்ய இந்தியாவுக்கு வேண்டுமானால் ஒரு மாதம் அவகாசம் தருகிறோம் என்று பண்ணையார்த்தனமாக அமெரிக்கா அறிவித்தபோதும் மோடி அரசு வாய் திறக்கவில்லை. ஆனால் ஆர் எஸ் எஸ்-ஐ தடை செய்ய வேண்டுமென்று கூறிய உடனே பதறி அடித்துக்கொண்டு மறுப்பு சொல்லுகிறது இந்த மோடி அரசு. மக்கள் பிரச்னைகளை விட மதப் பிரச்னைதான் எங்களுக்கு முக்கியம் என்று மீண்டும் மீண்டும் நிரூபித்துக்கொண்டே இருக்கிறது மோடி அரசு.*

**- பிரகாசு**

# *தேர்தல் களம்;* மக்களிடம் கூறுவோம்

**தமிழ்நாட்டு அரசியல் களங்களின் தொகுப்பு:**

● பாஜக தூண்ட முயற்சித்த கலவரங்களும்; உறுதுணையாக இருந்த அதிமுகவும்.

**● தஞ்சாவூர் மாணவி லாவண்யா தற்கொலை விவகாரம்; மதமாற்றம் காரணமல்ல சிபிஅய் அறிக்கை:**

● அதே 2022 ஆம் ஆண்டு தஞ்சாவூர் மாவட்டம் மைக்கேல்பட்டியில் அமைந்துள்ள ஒரு கிறுத்துவ பள்ளியில் பயின்ற மாணவி விஷம் குடித்து தற்கொலைக்கு முயன்றுள்ளார்.

● அந்த மாணவி மருத்துவமனையில் சிகிச்சையில் இருக்கும் போது, “மத மாற்றம் தான் காரணம்” என்று பேசியது போல ஒரு காணொளி தஞ்சாவூர் மாவட்ட விஷ்வ இந்து பரிஷத் மாவட்ட தலைவரால் பகிரப்பட்டது. அந்தக் காணொளியை பாஜக அண்ணாமலை பகிர்ந்து பள்ளி நிர்வாகம் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பதிவிட்டிருந்தார். காவல்துறை விசாரணையில் அந்த காணொளி வதந்தி என கண்டறியப்பட்டது. அண்ணாமலை பள்ளி நிர்வாகத்தை குறி வைத்ததற்கான காரணம் பள்ளி நிர்வாகம் கிறிஸ்துவ மதத்தைச் சேர்ந்தது.




● தமிழ்நாடு அரசு மிகக் கவனமாக கையாண்டதால் மதக்கலவரம் தடுக்கப்பட்டது. இந்த சம்பவத்தை வைத்து, பாஜக-வின் மாணவர் அமைப்பான ABVP சார்பில் டெல்லியில் ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. தமிழ்நாட்டில் முதலமைச்சர் வீட்டையும் முற்றுகையிட முயன்றனர். .

● பாஜகவினர் இந்த வழக்கை சி.பி.அய் விசாரிக்க வேண்டும் என்று போராட்டம் நடத்தினர். நீதிமன்றம் வழக்கை சி.பி. அய்-வசம் ஒப்படைத்தது. தமிழ்நாடு அரசைக் கண்டித்து சி.பி. அய்-க்கு உத்தரவிட்டவர் சுவாமிநாதன். வழக்கை விசாரித்த சி.பி.அய் “மதமாற்றத்தால் தற்கொலை நடைபெறவில்லை” என்று அறிக்கையை உச்சநீதிமன்றத்தில் சமர்ப்பித்தது.

● மேலும் அந்த பள்ளியில் 2010-ம் ஆண்டு முதல் பயின்ற மாணவர்களின் மாற்றுச் சான்றிதழை சரிபார்த்ததில் மத மாற்றம் நிகழ்ந்ததற்கான எந்த அறிகுறியும் இல்லை என்று சி.பி.அய் அறிக்கையில் குறிப்பிட்டிருந்தது.

**தமிழ்நாட்டில் மதக் கலவரங்களை தூண்டிவிட முயன்றது யார்? மதக்கலவரத்தை தூண்டுவிட்டு மூக்கை உடைத்து போனது பாஜக அஇதிமுக கதை!**

● லாவண்யா மட்டுமல்ல அந்தப் பள்ளியில் பயின்ற எவருமே இதுவரை மதமாற்றம் செய்யப்படவில்லை. கிட்டத்தட்ட 160 ஆண்டுகளாக செயல்பட்டுவரும் பள்ளி. பாஜக சார்பில் உண்மை அறியும் குழுவும், தேசிய குழந்தைகள் நல ஆணையமும் விசாரணை நடத்த தமிழ்நாட்டிற்கு வந்தன.

● மைக்கேல்பட்டியைச் சேர்ந்த ஊர் மக்கள், “ஒற்றுமையாக இருக்கும் எங்கள் ஊருக்குள் எந்தக் குழுவும் வரக் கூடாது என்றனர்.” என்று பாஜகவை சிறிது கூட கண்டிக்காமல் பாஜகவின் இந்த மதக்கலவரத்திற்கான முயற்சியை அமைதியாக வேடிக்கை பார்த்தது அதிமுக.

● 2022 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் தீபாவளி பண்டிகையை ஒட்டி யூடியூப் சேனல் ஒன்றுக்குப் பேட்டி அளித்த அண்ணாமலை, “தீபாவளியின் போது பட்டாசு வெடிப்பதற்கு எதிர்ப்பு தெரிவித்து கிறிஸ்தவ மிஷனரி தான் முதலில் உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தனர்” என்று குறிப்பிட்டு இருந்தார். இந்த அவதூறு பேச்சுக்கு சமூக ஆர்வலர் பியூஷ் மனுஷ் வழக்கு பதிவு செய்தார். இந்த வழக்கில், நீதிமன்றம் “அண்ணாமலையின் பேச்சில் மதவெறுப்பு உள்ளது” என்பதை உறுதி செய்தது.

● “சமுதாயத்தை பிளவுபடுத்த வேண்டும் என்ற உள்நோக்கம் அண்ணாமலைக்கு இருந்துள்ளதற்கு முகாந்திரம் உள்ளது. வன்முறைகள் உருவாகவில்லை என்றாலும் வெறுப்புப் பேச்சு வெறுப்பு பேச்சு தான்” என்று அண்ணாமலைக்கு உயர்நீதிமன்றம் கண்டனத்தையும் தெரிவித்தது.

●அப்போது அதிமுக பாஜகவுடன் கூட்டணியில் தான் இருந்தது. அண்ணாமலையின் கருத்து குறித்து எந்த கருத்தையும் அதிமுகவினர் தெரிவிக்கவில்லை.

● இரு மாநிலங்களுக்கு இடையில் கலவரத்தை தூண்ட முயற்சித்தது பாஜக. வடமாநிலத் தொழிலாளர்களுக்கு தமிழ்நாட்டில் ஆபத்து என்றும் பீகார் தொழிலாளர்களுக்கு தமிழ்நாட்டில் ஆபத்தான சூழல் நிலவுகிறது என்றும் புலம்பெயர் தொழிலாளர்களை இங்குள்ள தமிழ்நாட்டு மக்கள் அடிக்கிறார்கள் என்றும், இந்தி பேசியதால் 12 நபர்களை கழுத்தறுத்து கொன்று விட்டார்கள் என்றும் பீகாரைச் சார்ந்த பாஜகவின் செய்தித் தொடர்பாளர் பிரசாந்த் குமார் உம்ராவ் என்பவர் பரப்பினார்.

● இதனால் மிகவும் பதட்டமான சூழல் ஏற்பட்டது, ஆனால் தமிழ்நாடு அரசு உடனடியாக இது போலி செய்தி என்பதை அம்பலப்படுத்தியது. பொய்யான தகவலைப் பகிர்ந்த நபர் மீது தமிழ்நாடு காவல்துறை வழக்கு பதிவு செய்து கைதும் செய்தது.

● வடமாநிலத் தொழிலாளர்கள் கொல்லப்படுகிறார்கள் என்பது போலியான செய்தி என்பது தெரிந்தும் அண்ணாமலை, “திமுக நிர்வாகிகளான எம்.பி. தயாநிதி மாறன், அமைச்சர்கள் பொன்முடி, மூர்த்தி ஆகியோர் வடமாநில தொழிலாளர்களுக்கு எதிராக வெறுப்புணர்வை தூண்டும் வகையில் கடந்த காலங்களில் பேசியுள்ளனர். அதனால் செய்தி பரவியதும் மக்கள் உண்மை என நம்பியுள்ளனர்” என்று அறிக்கை வெளியிட்டார்.

● வடமாநிலத் தொழிலாளர் பிரச்சனை என்பது திட்டமிட்டு முதலமைச்சர் ஸ்டாலின் அவர்கள் பிறந்த நாளில் தேஜஸ்வி யாதவ் கலந்து கொண்ட நாளில் பொய் செய்தி பரப்பப்பட்டது. 2023 ஆம் ஆண்டு தேஜஸ்வி யாதவ் பீகாரின் துணை முதலமைச்சர், எனவே பீகார் சட்டமன்றத்தில் தேஜஸ்வி யாதவை குறிவைத்து பாஜக எம்.எல்.ஏ-க்கள் கூச்சலிட்டனர்.

● போலி செய்தியை பரப்பியது பாஜகவை சேர்ந்த நபர், அது போலியானது என கைது செய்யப்பட்ட பிறகும் பீகார் பாஜகவினர் தேஜஸ்விக்கு எதிராக போராட்டத்தை செய்தனர், தமிழ்நாடு பாஜக திமுகவை குறிவைத்து அறிக்கை வெளியிட்டது. இருமாநிலத்திலும் கலவரத்தை உண்டாக்கி இரண்டு மாநிலங்களிலும் ஆட்சியைப் பிடிப்பதற்கு பாஜக பயன்படுத்தியது போலி செய்தி.

இதையும் அதிமுக பாஜக கூட்டணியில் இருந்து கொண்டு அமைதியாக வேடிக்கை மட்டுமே பார்த்துக் கொண்டிருந்தது. - மனோஜ்

## காதில் பூ சுத்துகிறார் எடப்பாடி!

**மதச்சார்பின்மை கொள்கையில் அணுவளவும் மாற மாட்டோம்! - இசுலாமியர்கள் மத்தியில் எடப்பாடி பேச்சு.**

● முத்தலாக் தடை சட்டத்தை ஆதரிப்பார்.

● குடியுரிமை திருத்த சட்டத்தை ஆதரிப்பார்.

● திருப்பரங்குன்றத்தில் எல்லைக் கல்லில் விளக்கேற்றி - மதக்கலவரத்தை உருவாக்கும் சங்கிகளை ஆதரிப்பார்.

● நீதிபதி ஜி.ஆர்.சுவாமிநாதன் தீர்ப்பை ஏன் திமுக ஆட்சி ஏற்கவில்லை? என்று கேள்வி கேட்பார்.

●"திராவிடத்தை அழிக்க முருகா வா!" என்று முருகன் மாநாட்டில் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டபோதும், கலவர மாநாட்டுக்கு வாழ்த்து செய்தி அனுப்புவார்.

● தங்கள் சகாக்களான செல்லூர் ராஜூ, கடம்பூர் ராஜூ, ராஜேந்திர பாலாஜி, ராஜன் செல்லப்பா, ராஜ் சத்தியன் அவர்களையும் மாநாட்டுக்கு வழியனுப்பி வைப்பார்.

● ஆர்.எஸ்.எஸ் நூற்றாண்டு விழாவுக்கு முன்னாள் அமைச்சர் வேலுமணியை அனுப்பி வைப்பார்.

● அதே முருகன் மாநாட்டில் பெரியார் அண்ணாவை அவமதிக்கும் வீடியோ ஒளிபரப்பிய போது பங்கேற்ற அதிமுகவினர் மவுனம் சாதித்தார்கள். எடப்பாடி இதை கண்டிக்க மாட்டார்.

● கோயில் நிதியை எடுத்து கல்லூரிகள் கட்டக் கூடாது என்ற சங்கிகளின் குரலை எதிரொலிப்பார்.

## வந்துட்டாங்கப்பா தேர்தல் ஆணையம்!

டும் டும்..டும்...டும்..தேர்தல் அறிவிப்பு வந்தாச்சு; தேர்தல் ஆணையம் களத்தில் இறங்கி விட்டோம்.

● இனி வாகனங்களில் லட்சக்கணக்கில் வணிகத்துக்கோ குடும்ப செலவுக்கோ திருமணத்துக்கோ பணம் எடுத்துச் சென்றால் பறிமுதல் செய்து விடுவோம்.

நாங்கள் தேர்தலில் பணப்பழக்கத்தையே முற்றாக ஒழித்து விட உறுதி எடுத்து வந்து விட்டோம் இதை நீங்கள் நம்ப வேண்டும்.

● அடுத்த 30-நாட்களுக்கு கட்சி அடையாளங்களையே உங்கள் நினைவில் இருந்து அகற்றப் போகிறோம்; இதற்காக சுவர் எழுத்துக்களை அழிக்க கிளம்பிவிட்டோம்; எம்.எல்.ஏ-க்கள் அலுவலகங்களை பூட்டு போட புறப்பட்டு விட்டோம்; தலைவர்கள் படங்கள் அடுத்த ஒரு மாதத்திற்கு அரசு அலுவலகத்தில் இருக்கவே கூடாது அகற்றப் போகிறோம்.

எந்தத் தலைவரின் நினைவும் உங்கள் கனவில் கூட வரக்கூடாது அதற்கான மந்திரக்கோல் எங்களிடம் இருக்கிறது.

● ஆனால் அலுவலகங்களில் பூஜை போடும் சரஸ்வதி,விநாயகர், ராமன் படங்களில் கை வைக்க மாட்டோம். இது பாஜகவின் சின்னம்தான் என்பது எங்களுக்கும் தெரியும். இதில் கை வைத்தால் இந்து மத அவமதிப்பு மட்டுமல்ல பாஜக அவமதிப்பும் எங்களுக்கு வந்து சேர்ந்து விடும்.

நாங்கள் மிக மிக நேர்மையானவர்கள் என்று சத்தியம் செய்கிறோம்.

● எங்களுக்கான அதிகாரங்களை அரசியல் சட்டத்தையும் தாண்டி அமித் ஷாவும் மோடியும் வாரி வழங்கி இருக்கிறார்கள்.

அதனால் தான் வாக்காளர்களின் குடியுரிமையையே நாங்கள் கேள்வி கேட்கிறோம்.

● நாங்கள் எதற்கும் அஞ்சப்போவதில்லை.

★ ராகுல் காந்தி எங்களின் தில்லுமுல்லுகளை ஆதாரப்பூர்வமாக அம்பலப்படுத்தினாரே; அஞ்சினோமா? மம்தா பானர்ஜி வீதிகளில் போராடுகிறாரே கலங்கினோமா?

★ உச்சநீதிமன்றமே தலையிட்டு எங்களை தலையில் குட்டுகிறதே; அவமானப்பட்டோமா?

★ எங்களை கண்காணிக்க நீதிமன்றம் நீதிபதிகள் குழுவையே நியமித்திருக்கிறதே; அசந்தோமா?

★ எல்லாவற்றையும் விடுங்கள்; எங்கள் தலைவர் ஞானேஸ்வரன் மீது நாடாளுமன்றத்தில் பதவி நீக்க தீர்மானம் வந்திருக்கிறதே?கவலை இல்லை

★ விஜய் மொழியில் கூற வேண்டுமானால் வொர்த் இல்லாத பிரச்சனை!

● நாங்கள் எம்எல்ஏக்கள் கட்சி தாவலை தடுக்க மாட்டோம் மாநிலங்களவை தேர்தலில் எம்.எல்.ஏ-க்கள் கட்சி மாறி ஓட்டு போடுவதை கைதட்டி வேடிக்கை பார்ப்போம். தேர்ந்தெடுக்கப்பட்ட முதல்வரையே ஹைஜாக் செய்தால் கூட திரும்பி பார்க்க மாட்டோம்.

டும்.. டும் டும்.. மக்களே எங்களை ஆதரியுங்கள்...

● நமது பாரதத் தாயின் ஜனநாயகப் பெருமையை உலகத்துக்கே படம் காட்டி ஆஸ்கார் பரிசை தட்டிப் பறிக்கப் போகிறோம்.

இது எஸ்.அய்.ஆர் மீது சத்தியம்! ~ கோடங்குடி மாரிமுத்து

*கழகத் தலைவரின் தொடர் அடுத்த இதழில் வெளிவரும்.*

Posted at Egmore RMS,Pathirika Channel, Chennai-08
Date Of Publication - Every Thursday Tamil Weekly Reg.No.tn/cc(S)Dn/459/25-27 Licenced To Post Wpp no.tn/PMG(CCR)/WPP-462/25-27
Puratchi Periyar Muzhakkam Registered With The Registrar Of Newspaper For India Under no.tntam/2002/07776

★ இளம்பிள்ளை ★ சிந்தாமணியூர் ★ கே.ஆர் தோப்பூர் ★ ஏற்காடு ★ சேலம் மாநகரம் ★ கொளத்தூர் பகுதிகளில் கழகப் பிரச்சார அலை!

# கழகம் இறங்கியது சேலம் கிழக்கு!

**சேலம் கிழக்கு மாவட்டக் கழகம் “தொடரட்டும் தமிழ்நாட்டில் சாதனைகள்.. திமுக ஆட்சியை உறுதிசெய்வோம்” என்ற தலைப்பில் தேர்தல் பரப்புரைக் கூட்டங்களை முனைப்புடன் நடத்தி வருகிறது. கிளைக் கழகத் தோழர்கள் ஏற்பாட்டில் சேலம் கிழக்கு மாவட்டத்தின் முக்கிய வீதிகளில் மக்களை சந்தித்து பரப்புரைக் கூட்டங்களை நடத்தி வருகிறார்கள். அதன் தொகுப்பு:**

**3வது நாள் மார்ச்-02 இளம்பிள்ளை**: கிழக்கு மாவட்டக் கழகம் சார்பில் 02.03.2026 நாள் முழுவதும் தாரமங்கலம் பேருந்து நிலையம், சின்னப்பம்பட்டி பேருந்து நிறுத்தம், கொல்லப்பட்டி பேருந்து நிறுத்தம் ஆகிய 3 இடங்களில் கூட்டம் நடைபெற்றது. தங்கதுரை (சேலம் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர்), குடந்தை பாலன், ரமேஷ் (இளம்பிள்ளை நகரச் செயலாளர்) ஆகியோர் தலைமை வகித்தனர்.





சக்திவேல் (சேலம் கிழக்கு மாவட்டத் தலைவர்), டேவிட் (சேலம் கிழக்கு மாவட்டச் செயலாளர்), சந்திரசேகரன் (நங்கவள்ளி நகரச் செயலாளர்) ஆகியோர் முன்னிலை வகித்தனர். கிருஷ்ணன் (சேலம் மாவட்ட ஒருங்கிணைப்பாளர்) வரவேற்புரை ஆற்றினார். திமுக தலைமைக் கழக பேச்சாளர் சேலம் மேற்கு மாவட்ட இலக்கிய அணித் தலைவர் கோனூர் வைரமணி, மேட்டூர் குமரேசன், மோகன்ராஜ் (இளம்பிள்ளை நகரச் செயலாளர்), உமாசங்கர் (வனவாசி நகரச் செயலாளர்), பெரிய சோரகை ஆனந்த், கே.ஆர்.தோப்பூர் கண்ணன் ஆகியோர் பரப்புரை கூட்டத்தின் நோக்கங்களை பொதுமக்களிடையே எடுத்துரைத்தனர். மேட்டூர் முத்துராஜ் நன்றி கூற கூட்டம் நிறைவு பெற்றது.

பதிவாளர் இளங்கோவன், நாகராஜ், கவியரசு (தமிழ்நாடு மாணவர் கழக சேலம் மாவட்ட அமைப்பாளர்கள்), பிரபாகரன் (சேலம் மாவட்ட இளைஞர் அணிச் செயலாளர்), கொங்கனாபுரம் கோகுல், சேலம் பாலாஜி, பொட்டனேரி ரவிக்குமார் ஆகியோர் கலந்து கொண்டனர்.

**பாஜக அணியை விரட்டி அடிக்க சூளுரை**

**4வது நாள் மார்ச் 03:** இளம்பிள்ளை பேருந்து நிலையம், மகுடஞ்சாவடி பேருந்து நிறுத்தம், கே.கே.நகர் பேருந்து நிறுத்தம், சித்தர் கோவில் பேருந்து நிறுத்தம் ஆகிய 4 இடங்களில் நடைபெற்றது.கூட்டத்திற்கு தங்கதுரை (சேலம் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர்), ரமேஷ் (இளம்பிள்ளை நகரச் செயலாளர்), மோகன்ராஜ் (இளம்பிள்ளை நகரச் செயலாளர்) ஆகியோர் தலைமை வகித்தனர்.

கிருஷ்ணன் (சேலம் மாவட்ட ஒருங்கிணைப்பாளர்), குட்டி (இளம்பிள்ளை), தனபதி (இளம்பிள்ளை) ஆகியோர் முன்னிலை வகித்தனர். பிரபாகரன் (சேலம் மாவட்ட இளைஞர் அணிச் செயலாளர்) வரவேற்புரை ஆற்றினார். திவ்யா (சேலம் மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர்), ஆனந்தி (சேலம் மாநகரச் செயலாளர்) மேட்டூர் குமரேசன், மோகன்ராஜ் (இளம்பிள்ளை நகரச் செயலாளர்), உமாசங்கர் (வனவாசி நகரச் செயலாளர்), பெரிய சோரகை ஆனந்த், கே.ஆர்.தோப்பூர் கண்ணன் ஆகியோர் பரப்புரை கூட்டத்தின் நோக்கங்களை பொதுமக்களிடையே எடுத்துரைத்தனர்.

இளம்பிள்ளை சேகர் நன்றி கூற கூட்டம் நிறைவு பெற்றது. A.சண்முகம் மகுடஞ்சாவடி (சொசைட்டி செக்கரட்டரி) தோழர்களுக்கு தேநீர் வழங்கினார். தோழர்கள் அனைவருக்கும் மதிய உணவு இளம்பிள்ளை தமிழ்மணி வழங்கினார். திமுக இடங்கணசாலை நகரச் செயலாளர் செல்வம் தோழர்களுக்கு பழச்சாறு வழங்கினார். அவருக்கு கழக வெளியீடுகள் வழங்கப்பட்டது இளம்பிள்ளை தமிழ்மணி, ரவி, நாகராஜ், கவியரசு (தமிழ்நாடு மாணவர் கழக சேலம் மாவட்ட அமைப்பாளர்கள்), கொங்கனாபுரம் கோகுல், மேட்டூர் முத்துராஜ், ராமச்சந்திரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

**5வது நாள் மார்ச்-04, சேலம் மாநகரம் :** கருங்கல்பட்டி காய் மார்க்கெட், வாரி ஹோட்டல், மூங்கப்பாடி பெண்கள் மேல்நிலைப் பள்ளி, கோட்டை மைதானம் ஆகிய 4 இடங்களில் நடைபெற்றது. டேவிட் (சேலம் கிழக்கு மாவட்டச் செயலாளர்), ஆனந்தி (சேலம் மாநகரச் செயலாளர்) ஆகியோர் தலைமை வகித்தனர். தேவராஜ் (சேலம் மாநகர அமைப்பாளர்), பாலாஜி ஆகியோர் முன்னிலை வகித்தனர். வெற்றிமுருகன் (சேலம் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர்) வரவேற்புரை ஆற்றினார்.

ஏற்காடு பெருமாள் (சேலம் கிழக்கு மாவட்ட அமைப்பாளர்), வின்சென்ட் (புஇமு), யுவராஜ் (திமுக இளம் பேச்சாளர்), ஆனந்தி (சேலம் மாநகரச் செயலாளர்) பெரிய சோரகை ஆனந்த் ஆகியோர் திமுக அரசின் சாதனைகள் குறித்தும், ஒன்றிய அரசு தமிழ்நாட்டிற்கு இழைக்கும் துரோகங்கள் குறித்தும், பிரித்தாலும் சூழ்ச்சிகள் குறித்தும், மதப் பிரிவினை குறித்தும் பொதுமக்களிடையே எடுத்துரைத்தனர். மேட்டூர் முத்துராஜ் நன்றி கூற கூட்டம் நிறைவு பெற்றது. திமுக தோழர்களும், கழகத் தோழர்களும் கலந்து கொண்டனர்.

**6வது நாள் மார்ச்-05:** நெத்திமேடு, அன்னதானப்பட்டி, அருணாசலம் மெயின் ரோடு, தாதகாப்பட்டி கேட் ஆகிய 4 இடங்களில் நடைபெற்றது. கூட்டத்திற்கு டேவிட் (சேலம் கிழக்கு மாவட்டச் செயலாளர்), ஆனந்தி (சேலம் மாநகரச் செயலாளர்) ஆகியோர் தலைமை வகித்தனர். தேவராஜ் (சேலம் மாநகர அமைப்பாளர்), பிரபு (சேலம் மாநகர பொருளாளர்) ஆகியோர் முன்னிலை வகித்தனர். வெற்றிமுருகன் (சேலம் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர்) வரவேற்புரை ஆற்றினார்.

திமுக 49 வது கோட்ட பொறுப்பாளர் சசிகுமார், திமுக 49 வது கோட்ட அவைத் தலைவர் எஸ்.ஆர்.குமாரவேலு, திமுக 54வது கோட்டச் செயலாளர் ஞானசேகர், 54 வது கோட்ட அவைத்தலைவர் சுடலைமுத்து, சேலம் மேற்கு மாவட்ட அமைப்பாளர் நங்கவள்ளி அன்பு, ஏற்காடு பெருமாள் (சேலம் கிழக்கு மாவட்ட அமைப்பாளர்), ஆனந்தி (சேலம் மாநகரச் செயலாளர்), கே.ஆர்.தோப்பூர் கண்ணன் ஆகியோர் கருத்துரையாற்றினர். மேட்டூர் முத்துராஜ் நன்றி கூற கூட்டம் நிறைவு பெற்றது.

**மார்ச்-14:** சனி மாலை 7.00 மணியளவில் கொளத்தூர் ஒன்றியக் கழகம் சார்பில் பரப்புரைக் கூட்டம் காவலாண்டியூரில் நடைபெற்றது. கொளத்தூர் ஒன்றியப் பொறுப்பாளர் விஜயகுமார் தலைமையேற்றார். காவை கிளைக்கழகச் செயலாளர் தங்கராசு, சேகர், கொளத்தூர் கணேசன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். திமுக கொளத்தூர் ஒன்றியச் செயலாளர் மிதுன் சக்ரவர்த்தி பரப்புரை கூட்டத்தில் தொடக்கவுரை ஆற்றினார். கழகத் தலைமைக்குழு உறுப்பினர் காவை. ஈசுவரன், மாவட்ட அமைப்பாளர் டைகர் பாலு, மாவட்ட அமைப்பாளர் நங்கவள்ளி அன்பு, வி.சி.க. கொளத்தூர் ஒன்றியச் செயலாளர் சேட்டுகுமார், தீனரட்சகன், கழக தலைமைக்கழக பேச்சாளர் காவை இளவரசன் ஆகியோர் சிறப்புரையாற்றினர். மாரி நன்றி கூறினார்.

பரப்புரைக் கூட்டத்தில் தோழர்கள் SMT பிரபு, சுகந்தன், கண்ணையன், பொன்னுசாமி, சசிகுமார், பச்சியப்பன், சிந்துசாமி, கலைச்செல்வி, பழனிசாமி, அபிமன்யு, நங்கவள்ளி ராஜேந்திரன், குமார் ஆகியோர் கலந்துகொண்டனர். இக்கூட்டத்தில் கலந்துகொண்ட அனைவருக்கும் கொளத்தூர் ஒன்றிய தி.மு.க. மாணவரணி பொறுப்பாளர் விக்னேஷ் உணவு வழங்கினார்.

பரிசாக கழக வெளியீடுகளை தோழர்கள் வழங்கினர். மேட்டூர் முத்துராஜ், தமிழ்நாடு மாணவர் கழக சேலம் மாவட்ட அமைப்பாளர்கள் நாகராஜ், கவியரசு மற்றும் சிந்தாமணியூர் முருகேசன், மகிழினி ஆகியோர் கலந்து கொண்டனர்.

## பொள்ளாச்சியில் நடைபெற்ற பெரியாரியல் பயிலரங்கம்!

கோவை மாவட்டம், பொள்ளாச்சியில் "தேர்தல் அரசியலும் தந்தை பெரியாரும்" என்ற தலைப்பில் "பெரியாரியல் பயிலரங்கம்" 23.02.2026 திங்கள் அன்று காலை 11 முதல் 5 மணி வரை இரண்டு வகுப்புகளாக நடைபெற்றது. கோவை மாவட்ட பொறுப்பாளர் யாழ்.வெள்ளியங்கிரி தலைமை வகித்து தலைமையுரையாற்றினார். ஆனைமலை நகரச் செயலாளர் ஆனந்த், அரிதாசு ஆகிய தோழர்கள் முன்னிலை வகித்தனர். பொள்ளாச்சி நகரச் செயலாளர் சபரிகிரி வரவேற்புரையாற்றினார்.



திராவிட இயக்கத் தமிழர் பேரவையின் துணைப் பொதுச்செயலாளர் காசு நாகராசன் "திராவிட மாடல் இன்றும் நாளையும்" என்ற தலைப்பில் திராவிட கட்சிகள் தோன்றிய ஆரம்ப காலத்திலிருந்து மாணவ, மாணவிகள் ஆரம்ப தொடக்கப்பள்ளி தொடங்கி கல்லூரி உயர் படிப்பு முடிக்கும் வரை அவர்களை பல்வேறு திட்டங்களால் ஊக்கப்படுத்தி வாழ்வில் முன்னேற்றி சென்றதையும் நிகழ்கால திராவிட மாடல் அரசு தமிழ்நாட்டை அறிவு ஒளி பெற செய்து கொண்டிருப்பதைப் பற்றியும், மீண்டும் இந்தத் திராவிட மாடல் அரசு ஆட்சி அமைத்திட நம்மை போன்ற திராவிடக் கொள்கை அமைப்புகள் உறுதுணையாக நிற்க வேண்டும் எனக் கூறி விளக்கவுரையாற்றினார்.

கழகத் தலைவர் கொளத்தூர் மணி கீழ்வெண்மணி படுகொலை, அயோத்திதாச பண்டிதர், வாச்சாத்தி வன்கொடுமை, மேலவளவு ஆணவக்கொலை, தென் மாவட்டங்களில் ஏற்படாத பெரியாரியல் தாக்கம் போன்ற தோழர்களின் கேள்விகளுக்கு பதில் அளித்தார். மீண்டும் திராவிட மாடல் அமைய வேண்டும் எனவும், "பெரியாரின் பார்வையில் இன்றைய அரசியல்" என்ற தலைப்பில் மிக விரிவாக விளக்கவுரையாற்றினார். **கழகத் தலைவரிடம் ரூ.9,000 பொள்ளாச்சி கழகத் தோழர்கள் பெரியார் முழக்க சந்தா வழங்கினார்கள்.** கலந்துகொண்ட அனைவருக்கும் மதியம் அசைவ உணவு வழங்கப்பட்டது. நிர்மல் குமார் (கோவை மாநகரத் தலைவர்), நவின் (கோவை மாநகர அமைப்பாளர்), விஷ்ணு (கோவை மாநகர துணைச் செயலாளர்), தரணி, சிட்கோ ராஜசேகர், வினோதினி, நடராஜ், பிரியா மோகன், வானுகன், அமுதன், வெங்கட், லட்சுமி, செல்வராசு ஆகிய தோழர்கள் பங்கேற்றனர்.

## கழகப்பணிகளைப் பாராட்டி நன்கொடை!

**கோவை:-** சிறுமுகை அருகே உள்ள வெள்ளிக்குப்பம்பாளையத்தைச் சார்ந்தவர் மாரண்ணன். இவர் அரசுப்பள்ளி ஆசிரியராக இருந்து ஓய்வுபெற்றவர். தனது இளம் வயதில் இருந்தே பொதுவுடைமைக் கொள்கைகள் மீதும், திராவிடர் இயக்கக் கொள்கைகள் மீதும் பெரும் ஈடுபாடு கொண்டவர். மேலும் தமிழ்ச் சமூகத்தின் விடுதலைக்காகப் பாடுபடும் இயக்கங்களை ஊக்குவிப்பதைத் தனது தலையாய கடமையாகக் கொண்டவர் ஆசிரியர் மாரண்ணன். கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையில் இயங்கும் திராவிடர் விடுதலைக் கழகத்தின் ஜாதி ஒழிப்புப் பணிகளை பாராட்டியும் மேலும் தொடர்ந்து செயல்பட விருப் பத்தைத் தெரிவித்து ரூ.10,000/-யை கழக கோவை மாநகரத் தலைவர் நிர்மல்குமாரிடம் அவர் வழங்கினார்.



பின்னர் கழகத் தலைவர் கொளத்தூர் மணியுடன் சில நிமிடங்கள் தொலைபேசியில் உரையாடினார். நிறைவாகக் கழகத்தின் வார இதழான "புரட்சிப் பெரியார் முழக்கம்" இதழுக்கு ஆண்டு சந்தா ரூ.300/- செலுத்தி மகிழ்ந்தார். மேட்டுப்பாளையம் நகரப் பொறுப்பாளர் அமுல்ராஜ், மற்றும் அன்னூர் விஷ்ணு ஆகியோர் உடனிருந்தனர்.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS Under WPP
Posted : March 19, 2026

Owned and Published By : K. Rajendran, From 29, Journalists Colony, Thiruvalluvar Nagar, Thiruvanmiyur, Chennai - 600 041. Ph : +91 63697 76351
and Printed By : S. Theesmas, at Lilly Soosai Offset, New No.8, Old No.12/1, Mohammed Usain Lane, Royapettah, Chennai - 600 014.
Editor :K. Rajendran